நடத்துகின்ற நிர்வாகத்தினர் அதற்கான நியாயமான காரணங்களைக் காட்டியும், வசதிகளைக் காட்டியும் விண்ணப்பிக்க வேண்டும். அப்படி ஒரு விண்ணப்பம் வருகிறபோது, அங்கேயுள்ள மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அதுபற்றி ஆய்வு செய்து, அந்தக் கருத்துருவை மேலே அனுப்ப வேண்டும். மேலும், சுயநிதி அடிப்படையிலே நடத்துவதாக இருந்தாலும், அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்று விண்ணப்பிப்பார் களேயானால், வருகிற கல்வியாண்டில் அதுபற்றி பரிசீலிக்க முடியும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே திருப்பனந்தாள் ஒன்றியத்தில் கோணளாம்பள்ளம் என்ற ஊரில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய மக்கள் பங்குத் தொகையைச் செலுத்திவிட்டு 3 ஆண்டு காலமாகிறது. அதையும் வருகிற கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளியாக்க ஆவன செய்வார்களா, அனுமதிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி உரிய நேரத்தில் ஆய்வு செய்யப்படும். ஏனென்றால், விண்ணப்பித்திருக்கின்ற எண்ணிக்கை மிக அதிகமாக இருந்து, நிதி ஒதுக்கீடு அந்த அளவுக்கு இடம் தராதபோது, அவை பரிசீலிக்கப்படும். ஆனால், அதற்கு ஒரு முன்னுரிமை வழங்கக் கருதப்படும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 206, டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

206—

இலங்கைத் தமிழ் அகதிகளுக்குக் கல்வி வசதி

***2090 டாக்டர் க. கிருஷ்ணசாமி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலங்கைத் தமிழ் அகதிகளுக்குத் தடையின்றி கல்வி வசதி வழங்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

1996 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் கல்வி பயில இருந்த தடையை, கடந்த கால அரசு ஏற்படுத்தியிருந்த தடையை, இந்த அரசு ஏற்கெனவே நீக்கி அவர்கள் கல்வியைத் தொடர வழி வகுத்துள்ளது. இவர்கள் தமிழகத்தில் அகதிகளாக இருக்கும் வரை, அதே போல இலங்கைத் தமிழர்கள் பாஸ்போர்ட் உள்ளவர்களாக இருக்கும் வரை தடையின்றி கல்வி வசதி பெறலாம்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கை தமிழ் அகதிகளுக்குத் தடையின்றி கல்வி வசதி வழங்க அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதே சமயத்தில் அவர்களுக்கு இன்று ஒருசில சதவீத இடஒதுக்கீடுகள்தான் இருக்கின்றன. தற்போது இலங்கையில் அமைதியின்மையின் காரணமாக அங்கே மாணவர்கள் கல்வி கற்க இயலவில்லை. எனவே, அங்கே நிரந்தரமாக அமைதி திரும்புகின்ற வரையிலாவது, இங்கே அவர்களுக்கு ஒரு வரம்பில்லாமல், தகுதி இருக்கக்கூடிய எல்லா மாணவர்களுக்கும் மருத்துவம் மற்றும் அனைத்துக் கல்லூரிகளிலும் இடவசதி செய்து தரப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற அந்தக் காலகட்டத்திற்கு முன்னாலேயே உயர்கல்வி அல்லது தொழிற்கல்விக்கான போட்டித் தேர்வுகள் எல்லாம்கூட நடைபெற்றுவிட்டன. எனவே, அவர்களுக்கு ஒரு தனி முறை தந்து, தனி முறையில்தான் அவர்களைச் சேர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இங்கே உள்ளவர்களுக்கே இடஒதுக்கீடு விகிதாச்சாரம் இருக்கிறபோது, வெளியில் இருந்து வருகிறவர்களும் விகிதாச்சார அளவு ஒதுக்கீடு முறைக்குக் கட்டுப்பட்டவர் களாகத்தான் இருக்க முடியுமே தவிர, அளவு இல்லாமல் செய்வது என்பது இயலாத காரியம். இருந்தாலும்கூட, இந்த ஆண்டு அவர்கள் போட்டித் தேர்வில், திறமையைக் காட்டுகிற போட்டித் தேர்வில், கலந்து கொள்ளாமலேகூட, பொறியியல் கல்லூரிகளில் 20 இடங்களும், பாலிடெக்னிக் - பயிலகங்களில் 20 இடங்களும், ஏற்கெனவே கல்லூரிகளில் உள்ள இடங்களைவிட அதிகமாக ஒதுக்கப்பட்டு இடம் அளிக்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரிகளில் அவர்களுக்காக 5 இடங்கள், ஏற்கெனவே உள்ள இடங்களைவிட அதிகமாக ஒதுக்கி,

போட்டித் தேர்வு எழுதாமலே, அவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. அ. அசோகன்.

திரு. அ. அசோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழ் அகதிகளிடம் கல்விக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுகிறதா? கட்டணச் சலுகை உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடம் கொடுப்பதே சலுகைதான். ஆகவே, கட்டணம் எல்லோருக்கும் போல அவர்களுக்கும் உண்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 207, திரு. டி. மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

207—

ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்

***1072— திரு. டி. மணி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தொகுதியில் தூத்தூரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவ மனையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம், முன்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் தூத்தூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினை மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.